**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 481/2022 |
| Name | : | Prabhu |
| P.W. | : | 3 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மைவாடியில் வசித்து வருகிறேன். கண்டக்கராக வேலை செய்கிறேன். **08.06.2022**ம் தேதி இரவு **10.30** மணிக்கு மைவாடி பிரிவில் வைத்து போலீசார் விபத்து சம்மந்தமாக விசாரித்து என்னை சாட்சியாக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படம் பார்வை மகஜரில் உள்ள **2**வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(1)** நான் **15** வருடங்களாக அரசு நகரப் பேருந்தில் நடத்துநராக வேலை செய்து வருகிறேன். **2**ம் நெம்பர் ரூட் பேருந்தில் அந்த சமயத்தில் வேலை செய்து வந்தேன். போலீசார் விசாரித்ததாக சொல்லும் தேதியில் எத்தனை மணிக்கு எனக்கு பணி முடிந்தது என்றால் இரவு **10** மணிக்கு முடிந்தது. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையெழுத்து போட்டேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்